सत्यमेव जयते

# அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறை
# அறிவியல் மற்றும் தொழிற்நுட்பம் அமைச்சகம்
# இந்திய அரசு

**வளர்த்தெடுத்தல் (கிரண்) பிரிவு மூலம் ஆராய்ச்சி முன்னேற்றத்தில் அறிவுத்திறன் ஈடுபாடு**

## பெண் விஞ்ஞானி திட்டம்-B (WOS-B)

**(சமூக பயனுக்கான அறிவியல் & தொழிற்நுட்பம் தலையீடு)**

## ஆராய்ச்சி திட்டவரைவுகள் வரவேற்பு (2018-19)

அறிவியல் & தொழிற்நுட்பத் துறை (DST) அறிவியல் மற்றும் தொழிற்நுட்பம் (S&T) பிராந்தியத்தில் பெண்களை மேம்படுத்துவதற்காக பல முன்னோடி முன்முயற்சிகளை எடுத்துள்ளது. கிரண் பிரிவின் கீழ் பெண் விஞ்ஞானித் திட்டமானது (WOS) பிரதான விஞ்ஞானத்துக்கு திரும்புவதற்கான பொருத்தமான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், வாழ்வியல் பணியை முறித்துக் கொண்ட அறிவியல் & தொழிற்நுட்பம் பிராந்தியத்தில் சவால்களை எதிர்கொள்ளும் பெண்களை குறிப்பாக விழிப்பூட்டுகிறது.

**பெண் விஞ்ஞானித் திட்டம்-B (WOS-B)** கீழ், தனது அறிவியல் அறிவுத்திறன் மற்றும் இயல்பினை சமூக நலனுக்காக பயன்படுத்த விரும்பும் பெண் விஞ்ஞானிகள் மற்றும் தொழிற்நுட்ப வல்லுநர்களிடமிருந்து திட்டவரைவுகள் வரவேற்கப்படுகின்றன. பெண் விஞ்ஞானித் திட்டம்–B சமூக நலனுக்கான சமூக விவகாரங்கள் & சவால்களுக்கு அறிவியல் & தொழிற்நுட்பம் அடிப்படையிலான தீர்வுக்கு வழிவகுக்கும் செயல்திட்டங்கள் மீது கவனம் செலுத்துகிறது. இவ்வித செயல்திட்டங்கள் பயனளிக்கக்கூடிய தொழிற்நுட்பம்/நுட்பம் மற்றும்/அல்லது ஆய்வகத்திலிருந்து நிலத்துக்கு தொழிற்நுட்பம் பரிமாற்றுதல், அதன் தழுவல் மற்றும் அளவிடுதலை மேம்படுத்துவதன் மூலம் சாத்தியமுள்ள தீர்வுகளை வழங்க வேண்டும். திட்டம் அதிகபட்சம் மூன்று (3) ஆண்டு காலத்துக்கு அமலில் இருக்கும். அடிப்படை ஆராய்ச்சி திட்டவரைவுகள் பெண் விஞ்ஞானித் திட்டம்–B கீழ் ஏற்கப்படாது.

திட்டவரைவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கருத்துப் பகுதிகள் (குறிப்பிட்டவை மட்டும்):–

வேளாண் மற்றும் கூட்டு அறிவியல் (AAS)
சுகாதாரம், உணவு மற்றும் ஊட்டச்சத்து (HFN)
பொறியியல் மற்றும் தொழிற்நுட்பம் வளர்ச்சி (ETD)

தகுதிக்கூறு: அறிவியல் & தொழிற்நுட்பம் பகுதியில் அனுபவம் கொண்டிருக்கும் மேலும் 27–57 வயதுக்குள்ளான தன்னுடைய வாழ்வியல் பணியை நிறுத்திக் கொண்ட ஆனால் பலனளிக்கும் அறிவியல் & தொழிற்நுட்பம் தலையீடுகள் மூலம் நன்கு வரையறுக்கப்பட்ட/அடையாளம் காணப்பட்ட சமூக சவால்களை தீர்ப்பதில் ஆர்வமுள்ள பெண்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்கள். முழுநேர/நிரந்தர பணியாளர்களாக பணியாற்றும் பெண்கள் இந்த திட்டத்தில் விண்ணப்பிக்க தகுதியில்லை.

மதிப்பூதியங்கள்: திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி உதவித்தொகை:
பிஎச்.டி., அல்லது இணையானதற்கு மாதம் ₹55,000/– (மொத்த திட்ட மதிப்பீடு ₹30 லட்சத்துக்கு மிகாதது)
எம்.பில்./எம்.டெக். அல்லது இணையானதற்கு மாதம் ₹40,000/– (மொத்த திட்ட மதிப்பீடு ₹25 லட்சத்துக்கு மிகாதது)
எம்.எஸ்சி., அல்லது இணையானதற்கு மாதம் ₹30,000/– (மொத்த திட்ட மதிப்பீடு ₹20 லட்சத்துக்கு மிகாதது)
மொத்த திட்ட மதிப்பு முதன்மை ஆய்வாளர் (PI), நுகர்பொருட்கள், பயணம், எதிர்பாரா செலவுகள்மற்றும் சிறு உபகரணங்கள் ஆகியவற்றின் மேற்கூறிய ஆராய்ச்சி உதவித்தொகை உள்ளடக்கியது ஆனால் நிர்வாக செலவுகள் நீங்கலாக.

விண்ணப்பிக்கும் முறை: அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறை ஆராய்ச்சி திட்டவரைவுகளை இயங்குதளத்தில் சமர்ப்பிக்க e–PMS (onlinedst.gov.in) தொடங்கியுள்ளது. திட்டவரைவு சமர்ப்பிக்க ஆர்வமுள்ள நபர்கள் இந்த இணையதளத்தில் பதிவுபெற வேண்டும் மேலும் கொடுக்கப்பட்ட மாதிரியில் திட்டவரைவினை பதிவேற்றம் செய்ய வேண்டும். WOS–B திட்டவரைவு மாதிரி கிரண் பிரிவின் கீழ் e–PMS மற்றும் அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறை இணையதளத்தில் கிடைக்கப்பெறும். சமர்ப்பித்த ஆராய்ச்சி திட்டவரைவின் இரு வன்பிரதிகளை திருமதி நமீதா குப்தா, விஞ்ஞானி–'F', கிரண் பிரிவு, அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறை (DST), தொழிற்நுட்ப பவன், புது மெஹ்ராலி சாலை, புதுடெல்லி–110016 அவர்களுக்கு அனுப்பவும். உறையின் மேல் 'பெண் விஞ்ஞானித் திட்டம்–B (WOS–B)' என எழுத வேண்டும்.

**திட்டவரைவு சமர்ப்பிக்க கடைசி நாள்: 5 நவம்பர், 2018.** **விவரங்களுக்கு, காண்க www.dst.gov.in**

davp 36101/11/0012/1819